## 56. யேகோவா யீரே உம்மை பாடுவேன்

### பல்லவி

யேகோவா யீரே உம்மை பாடுவேன்
யேகோவா யீரே உம்மை போற்றுவேன்

### அனுபல்லவி

*எல்லாவற்றையும் அறிந்தவரே*
*எல்லாவற்றிக்கும் மூலகாரணர்*

### சரணங்கள்

1. ஒருவராய் பெரிய அதிசயங்களை
   என் வாழ்வில் செய்பவரே
   உம்மையே தொழுதுகொள்வேன்
   உமக்காய் காத்திருப்பேன்
   - யேகோவா யீரே

2. உந்தன் வல்லமை என் வாழ்வில்
   விளங்க செய்பவரே
   உம்மையே நோக்கியுள்ளேன்
   உம்மையே நம்பியுள்ளேன்
   - யேகோவா யீரே

3. வேண்டுவதற்கும் நினைப்பதற்கும்
   அதிகமாய் செய்பவரே
   என் தேவைகள் அறிந்தவரே
   திருப்தியாக்கி நடத்திடுவீர்
   - யேகோவா யீரே